# T20 Current Affairs

# for

# TNPSC

# Jul - 2022

Towards Your Success


## THULIRR IAS ACADEMY

**# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,**

**Anna Nagar West, Chennai – 40**

http://thulirracademy.in/ | Mobile # +91 944 506 5552 | Telegram: Thulirr Current Affairs

## Table of Contents

தமிழக நிகழ்வுகள் ....3
இந்திய நிகழ்வுகள்....11
பொருளாதாரம்....16
உலக நிகழ்வுகள்....17
சுற்றுச்சூழல்....18
அறிவியல் & தொழில்நுட்பம் ....20
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....22
திட்டம் ....23
மாநாடுகள் ....23
பாதுகாப்பு....24
விருதுகள்....24
விளையாட்டு நிகழ்வுகள்....25
புள்ளிவிவரம்....26
முக்கிய தினம்....28

**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirracademy.in/currentaffairs.php?ca_category=T20-T



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## தமிழக நிகழ்வுகள்

- **முதலாம் இராஜேந்திர சோழன் பிறந்த நாள்**
  - முதலாம் இராஜேந்திர சோழன் பிறந்த ஆடித்திருவாதிரை நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- **Search for doctor APP**
  - பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள மருத்துவரைக் கண்டறிய, 'Search for doctor APP' எனும் செயலியை இந்தியாவில் முதன் முறையாக தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அறிமுகம் செய்துள்ளது.
- **தென்னிந்தியாவில் முதல்முறையாக கோவையில் திருநங்கைகளுக்கான 'ரோட்டராக்ட் கிளப்' தொடக்கம்**
  - திருநங்கைகளின் வாழ்க்கையை மேம்படுத்த, 'ரோட்டரி கிளப் கோயம்புத்தூர் டவுன்டவுன்' கிளப்பின் ஒத்துழைப்புடன், தென்னிந்தியாவிலே முதல் முறையாக திருநங்கைகளுக்கான 'ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம்' கிளப் கோவையில் தொடங்கப்பட்டது.
  - 'ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம்' கிளப்பின் தலைவராக தேர்வு திருநங்கை தன்ஷிகா செய்யப்பட்டார்.
  - நாட்டில் முதல் கிளப் ஒடிசாவில் தொடங்கப்பட்டது. தேசிய அளவில் இரண்டாவதாகவும், தென்னிந்திய அளவில் முதலாவதாகவும் 'ரோட்டராக்ட் கிளப் ஆஃப் டிரான்ஸ்மாம்' கோவையில் தொடங்கப்பட்டுள்ளது.
- **உடுமலை அருகே நாட்டின் முதல் ' தென்னை மகத்துவ மையம் ' அமைப்பு**
  - 'நாட்டின் முதல் தென்னை மகத்துவ மையம்' உடுமலை அருகே திருமூர்த்திமலையிலுள்ள திருப்பூர் மாவட்டம் மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்துக்கு சொந்தமான செயல்விளக்க மற்றும் விதை உற்பத்தி பண்ணையில் அமைக்கப்பட்டுள்ளது
- **'ஒரு நிலையம், ஒரு பொருள் திட்டம்' : முதலிடத்தில் காஞ்சி பட்டு**
  - ரயில் நிலையங்களில் உள்ளூர் பொருட்கள் விற்பனை செய்யும் ஒரு நிலையம், ஒரு பொருள் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உள்ள ரயில் ரயில் நிலையங்களில் அதிக விற்பனையான பொருட்களை காஞ்சிப் பட்டு முதல் இடத்தில் உள்ளது.
- **காரைக்காலில் 1000-க்கும் மேற்பட்டோருக்கு காலரா அவசரநிலை பிரகடனம்**
  - புதுச்சேரி மாநிலம் காரைக்காலில் 1000-க்கும் மேற்பட்டோருக்கு காலரா தொற்று எதிரொலியாக அங்கு மாவட்டம் முழுவதும் பொது சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- **ரூ. 25,600 கோடியில் தமிழ்நாட்டில் செமிகண்டக்டர் உயர் தொழில் நுட்பப் பூங்கா**
  - சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்ட ஜஜிஎஸ்எஸ் வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் (IGSS Ventures – IGSSV), தமிழ்நாட்டில் 300 ஏக்கர் பரப்பளவில் ரூ. 25,600 கோடி மதிப்பீட்டில் ஒரு



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

செமிகண்டக்டர் உயர் தொழில்நுட்பப் பூங்காவை அமைப்பதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- தமிழ்நாடு அரசின் சார்பாக வழிகாட்டி நிறுவனத்துக்கும் ஐ.ஜி.எஸ்.எஸ். வென்ச்சர்ஸ் இடையே உயர் தொழில் நுட்ப பூங்கா அமைக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.
- ஐ.ஜி.எஸ்.எஸ்.வி ப்ராஜெக்ட் சூர்யா என்ற பெயரில் செமிகண்டக்டர் தொழில்நுட்பப் பூங்கா திட்டத்தை நிறுவ உள்ளது.

❖ **தமிழ்நாடு தடய அறிவியல் துறைக்கு 14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்கள்**

- ஜூலை 1, 2022 அன்று தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் பயன்பாட்டிற்காக ரூ.3 கோடியே 32 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட 14 நடமாடும் தடய அறிவியல் ஆய்வக வாகனங்களை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

❖ **காசநோய் இல்லாத தமிழகம் 2-ம் கட்ட திட்டப் பணிகள்**

- ஜூலை 1, 2022 அன்று காசநோய் இல்லா தமிழ்நாடு - 2025' என்ற இலக்கை அடைய தமிழக அரசின் 2-ம் கட்ட திட்டப் பணிகளை சென்னை நொச்சிக்குப்பத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்.
- காசநோய் இல்லா தமிழகம்-2025 என்னும் இலக்கின்படி, 2015-ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு 217 காசநோயளிகள் என்று இருந்த விகிதத்தை 2025-ஆம் ஆண்டுக்குள் குறைக்க வேண்டும்.
- அதன் ஒரு பகுதியாக, காசநோய் உள்ள இடங்களில் வசிப்பவர்களிடம் காச நோய் உள்ளதா என்பதை கண்டறிய, முதல் கட்டமாக 14 நடமாடும் எக்ஸ்ரே வாகனங்கள் வழங்கப்பட்டு உள்ளன.
- தற்போது இரண்டாம் கட்டமாக 23 மாவட்டங்களுக்கு தலா ரூ.46 லட்சம் வீதம், ரூ. 10 கோடியே 65 லட்சம் மதிப்பீட்டில் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவியுடன் கூடிய 23 நடமாடும் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது.

❖ **வணிகம் செய்வதை எளிதாக்கும் நடவடிக்கை தமிழ்நாடு 3-வது இடம்**

- வணிகம் செய்வதை எளிதாக்கும் நடவடிக்கையினால் இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த சாதனையாளராக 3-ம் இடத்திற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.
- அந்த வகையில் தமிழ்நாடு, 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அடங்கிய இந்த தரவரிசைப் பட்டியலில், 96.97 சதவீத மதிப்பெண்கள் பெற்று 3-வது இடத்தை பெற்றுள்ளது.
- 2016-17-ம் ஆண்டில் 18-வது நிலை, 2019-ம் ஆண்டு 14-வது நிலை என்றிருந்த தமிழ்நாடு, பெருமளவு முன்னேற்றம் கண்டு தற்போது 3-வது நிலையை பெற்றுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **"முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" மாநாடு**
  - ஜூலை 4, 2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" என்ற முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது.
  - "முதலீட்டாளர்களின் முதல் முகவரி - தமிழ்நாடு" மாநாட்டில் 1,25,244 கோடி ரூபாய் முதலீட்டில் 74,898 நபர்களுக்கு வேலை 1,497 கோடி ரூபாய் முதலீட்டில் 7,050 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 12 திட்டங்களுக்கான வணிக உற்பத்தியை தொடங்கிவைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின், 22,252 கோடி ரூபாய் முதலீட்டில் 17,654 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் வகையில் 21 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
  - தமிழக முதலமைச்சர் அவர்கள் நிர்ணயித்துள்ள இலக்கான 2030-31ஆம் நிதியாண்டிற்குள் தமிழ்நாட்டினை டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார 1 வளர்ச்சியடைய முதலீடுகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.
  - இந்த மாநாட்டில், தமிழ்நாடு உயிர் அறிவியல் கொள்கை தமிழ்நாடு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கொள்கை ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- **தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்ட அமலாக்கம் தமிழகம் 9-ஆவது இடம்**
  - நிகழாண்டு தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை சிறப்பாக அமலாக்கம் செய்யும் மாநிலங்களில் தமிழகம் 9-வது இடத்தில் உள்ளது.
  - முதலிடத்தில் ஒடிஸாவும், இரண்டாம் இடத்தில் உத்தர பிரதேசமும், மூன்றாம் இடத்தில் ஆந்திரமும் உள்ளன.
- **ஐஐடி சென்னையின் கோபாலகிருஷ்ணன்- தேஷ்பாண்டே மையத்துக்கு சர்வதேச விருது**
  - இந்திய தொழில்நுட்ப கழகம்- சென்னையின், புதுமை கண்டுபிடிப்பு மற்றும் தொழில் முனைவுக்கான கோபாலகிருஷ்ணன்- தேஷ்பாண்டே மையம், தொழில்நுட்ப வணிக மயமாக்கலில் சிறந்த நடைமுறை'-க்கான சர்வதேச விருதை வென்றுள்ளது. அமெரிக்காவின் ஓஹியோ மாகாணத்திற்கு உட்பட்ட க்ளீவ்லாந்தில் நடைபெற்ற 11 வது வருடாந்திர தேஷ்பாண்டே கருத்தரங்கில் இந்த விருது வழங்கப்பட்டது.
  - சென்னை ஐஐடியின் கோபாலகிருஷ்ணன் -தேஷ்பாண்டே மையம், கருத்துரு முதல் உற்பத்தியை அதிகரிப்பது வரையிலான ஸ்டார்ட்அப் வாழ்க்கை சக்கரம் மற்றும் அதன் தேசிய எதிர்ப்பார்ப்புகளை பூர்த்தி செய்வதில் சிறந்து விளங்குவதாக விருது குழு அறிவித்துள்ளது.
- **தேசிய உயர் கல்வி தரவரிசைப் பட்டியல் சென்னை ஐஐடி முதலிடம்**
  - 2022-ம் ஆண்டுக்கான இந்திய உயர் கல்வி நிறுவனங்களின் தேசிய அளவிலான தரவரிசை பட்டியலை (NIRF), மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார். அதில் ஒட்டுமொத்த கல்வி நிறுவனங்களின் பட்டியலில் ஐஐடி, மெட்ராஸ் முதலிடத்தைப் பெற்றுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- சென்னை ஐஐடி ஒட்டுமொத்தப் பிரிவிலும், பொறியியல் பிரிவிலும் தொடர்ந்து நான்காவது ஆண்டாக முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இந்திய அறிவியல் கழகம் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.

❖ **தேசிய தர வரிசைப் பட்டியல் சென்னை மருத்துவக் கல்லூரி 12 ஆவது இடம்**

- கல்லூரிகளுக்கான தர வரிசைப் பட்டியல் சென்னை மருத்துவக் கல்லூரி 12 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரிகளில் முதலிடம் பெற்றுள்ளது.
- தென்னிந்தியாவிலேயே முதன்முறையாக மருத்துவப் பயிற்சிக்காக சென்னை மருத்துவப் பள்ளியானது 1835-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் தேதி தொடங்கப்பட்டது.
- 1850-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளியானது சென்னை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது.

❖ **தமிழக அரசின் இலக்கிய மாமணி விருது - 2021**

- 2021-ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருது எழுத்தாளர்கள் கு. சின்னப்ப பாரதி, கோணங்கி, புலவர் இரா. கலியபெருமாள் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.
- மேலும், 2021ஆம் ஆண்டிற்கான தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெறும் திரு. கயல் (கோ) தினகரன், கபிலர் விருது பெறும் பாவலர் கருமலைத் தமிழாழன் (எ) கி. நரேந்திரன். உ.வே.சா விருது பெறும் மருத்துவர் இரா. கலைக்கோவன், அம்மா இலக்கிய விருது பெறும் முனைவர் மு. சற்குணவதி காரைக்கால் அம்மையார் விருது பெறும் முனைவர் இரா. திலகவதி சண்முகசுந்தரம் ஆகியோருக்கு தமிழக முதல்வர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

❖ **கழிவுநீர் மேலாண்மையில் அசத்தும் பாப்பாங்குழி: 100% தன்னிறைவு பெற்ற தமிழக கிராமம்**

- தமிழகத்தைச் சேர்ந்த பாப்பாங்குழி என்ற கிராமம் கழிவுநீர் மேலாண்மையில் 100 சதவீதம் தன்னிறைவு பெற்று விளங்குவதாக மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- தமிழகத்தின் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு உட்பட்ட ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்தில் உள்ள பாப்பாங்குழி கிராமப் பஞ்சாயத்து சமுதாய உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சி காரணமாக, கழிவுநீர் மேலாண்மை திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது. தூய்மை இந்தியா இயக்கம், கிராமப்புற திட்டத்தின் 2-ம் கட்டத்தின் ஒருங்கிணைந்த அம்சமாக கழிவுநீர் மேலாண்மை இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது.
- இந்த திட்டத்தின் கீழ் வீடு வாரியாகவும், சமுதாய ரீதியாகவும் கழிவுநீர் தொட்டிகள் அமைக்கப்பட்டு, முதலில் வடிகட்டப்படும் சாக்கடை கழிவுநீர் பின்னர் சுத்திகரிக்கப்படுகிறது. இதன் மூலம் அந்த கிராமத்தில் தினந்தோறும் 42,000 லிட்டர் கழிவுநீர் சுத்திகரிக்கப்படுகிறது. பாப்பாங்குழி கிராமத்தில் தினந்தோறும் பயன்படுத்தப்படும் 60,000



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

லிட்டர் தண்ணீரில் 70 சதவீதம், பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல் மற்றும் குளியலறையிலிருந்து கழிவு நீராக வெளியேறுகிறது.

❖ **"நம்ம குடியிருப்பு' செயலி" அறிமுகம்**

➢ தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புதாரர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தவணைகளை எளிய முறையில் செலுத்த நம்ம குடியிருப்பு என்ற புதிய செயலியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிமுகப்படுத்தினார்.

❖ **குழந்தை தொழிலாளர்கள் மீட்பு: இந்திய அளவில் தமிழகம் 2-வது இடம்**

➢ 2021-22-ம்ஆண்டில் இந்தியாவில் அதிக குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்ட மாநிலங்களில் தமிழகம் 2-வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 2021-22-ஆண்டில் மொத்தம் 13,271 குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர். இதில் அதிகபட்சமாக பஞ்சாப்பில் 4867 பேரும், தமிழகத்தில் 2586 பேரும் மீட்கப்பட்டுள்ளனர்.

❖ **'நம்மை காப்போம் - 48' திட்டம் : மதுரை அரசு மருத்துவமனை முதலிடம்**

➢ விபத்துகளில் காயமடைந்தவர்கள் உயிரைக் காப்பாற்றும் 'நம்மை காப்போம்-48' மருத்துவத் திட்டத்தில் தமிழகத்தில் மதுரை அரசு மருத்துவமனை முதலிடம் வகித்ததற்கு அமைச்சர் மா.சுப்பிரமணியம் பாராட்டு தெரிவித்துள்ளார்.

➢ தமிழகத்தில் உள்ள 38 மாவட்டங்களில் 'நம்மை காப்போம் 48' திட்டத்தில் மதுரை அரசு மருத்துவமனை தொடக்கம் முதலே முதலிடத்தில் உள்ளது.

➢ இத்திட்டத்தின் மூலம், சுகாதாரத்தறையில் தமிழகம் இந்தியாவுக்கே வழிகாட்டியாக திகழ்கிறது.

➢ டிசம்பர் 18, 2022-ல் மேல்மருவத்தூர் மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48' என்ற திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

➢ தமிழக எல்லையில் யாருக்கு விபத்து நேரந்தாலும் 680க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடனடியாக சிகிச்சைக்கு அனுமதிக்க செய்வது, அனுமதிக்கப்பட்ட முதல் 48 மணி நேரத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரை சிகிச்சை வழங்கி அவர்கள் உயிர்கள் காப்பாற்றப்படுகிறது.

➢ டிசம்பர் 21, 2022-ல் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் ரூ.40 லட்சத்தில் எலும்பு வங்கி திறக்கப்பட்டது. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் எலும்புவங்கி அமைப்பது இதுவே முதல்முறை. தற்போது மருத்துவமனைகளில் எலும்பு வங்கி பயன்பாடு மிகப்பெரிய தேவையாக உள்ளது

❖ **கிராம சபை கூட்ட செலவின வரம்பு உயர்வு - அரசாணை வெளியீடு**

➢ அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்டுதோறும் குடியரசு தினம், உழைப்பாளர் தினம், சுதந்திர தினம், காந்தி ஜெயந்தி ஆகிய நான்கு நாட்களில் மட்டும், கிராம சபைக் கூட்டம் நடந்து வந்தது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- கூடுதலாக, உலக தண்ணீர் தினமான, மார்ச் 22, உள்ளாட்சி தினமான நவம்பர் 1 ஆகிய நாட்களிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடக்கும் என, முதல்-அமைச்சர் அறிவித்தார்.
- அதன்படி நடப்பாண்டு முதல், ஆறு நாட்கள் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசாணை வெளியிடப்பட்டது.
- இந்த நிலையில், கிராம சபை கூட்டத்திற்கான செலவின வரம்பினை ரூ.1,000லிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

❖ **தமிழக அரசின் கனவு இல்லத் திட்டம்**

- ஞானபீடம், சாகித்திய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருது, புகழ்பெற்ற உலகளாவிய அமைப்பு விருது பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் வசிக்கும் (அ) விரும்பும் மாவட்டத்தில் தமிழக அரசு மூலமாக வீடு வழங்கப்படும்.
- கலைஞர் 97-வது பிறந்தநாள் (03.06.2021) முன்னிட்டு தமிழக முதல்வர் இத்திட்டத்தினை அறிவித்தார்.
- பயனாளிகள்

1. ந. ஜெகதீசன் (ஈரோடு தமிழன்பன்) – 2004–ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது ("வணக்கம் வள்ளுவ" கவிதை நூல்)
2. கவிஞர் புவியரசு (எ) ஜெகநாதன் – 2009-ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது ("கையொப்பம்" கவிதை நூல்)
3. பூமணி (எ) பூ. மாணிக்கவாசகம் - 2014-ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது ("அஞ்ஞாடி" புதினம்)
4. திரு. இமயம் (எ) வெ. அண்ணாமலை - 2020-ஆம் ஆண்டு சாகித்திய அகாடமி விருது ("செல்லாத பணம்" புதினம்)

THULIRR
IAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP II / II A
ONLINE / OFFLINE MAINS TEST BATCH
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905

- **அரசு பள்ளி மாணவர்களுக்கான இலவச சைக்கிள் திட்டம்**
    - ஜூலை 25, 2022 அன்று, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 11,12-ம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை சென்னை மாநகராட்சி நுங்கம்பாக்கம் அரசு ஆண்கள் பள்ளியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்
    - தமிழகத்தில் பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் மேல்நிலைப்பள்ளிகளில் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 படிக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் அனைவருக்கும் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தை தமிழக முன்னாள் முதல்வர் மறைந்த ஜெ.ஜெயலலிதா கடந்த 2001-2002-ம் ஆண்டில் நடை முறைப்படுத்தினார்.
    - இதைத்தொடர்ந்து, 2005-2006-ம் ஆண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிளஸ் 1 படிக்கும் அனைத்து பிரிவு மாணவ, மாணவிகள், ஐடிஐ படிக்கும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு விரிவுப்படுத்தியது.
- **தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பெயர் மாற்றம்**
    - தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பச் சேவைகளின் வளர்ச்சியை வலுப்படுத்த தகவல் தொழில் நுட்பவியல் துறை "தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
    - அதேபோல, தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் வளர் 4.0 வலைத்தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- **மாமல்லபுரத்தில் 45 அடி உயரத்தில் சிற்பக்கலை தூண் திறப்பு**
    - சர்வதேச 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியையொட்டி, மாமல்லபுரம் இசிஆர் நுழைவு வாயிலில் கலை நயத்துடன் அமைக்கப்பட்ட 45 அடி உயர சிற்பக்கலைத் தூணை ஜூலை 27, 2022 அன்று முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.
    - மாமல்லபுரத்தில் கைவினை கலையில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் நலனுக்காக "கைவினை சுற்றுலா கிராமம்" என்ற திட்டம் மாநில மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் 45 அடி உயரத்தில் அழகிய "சிற்பக்கலைத் தூண்" அமைக்கப்பட்டுள்ளது.
    - கலைநயமிக்க பல்லவர் கால சிம்மம், யாழி, தோகை விரித்தாடும் மயில்கள், யானைக்கூட்டம், ஆகியவைகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டு மாமல்லபுரத்திற்கு வருகைப் புரியும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் இந்த தூண் அமைக்கப்பட்டுள்ளது.
- **சென்னையில் 'ஸ்ட்ரீட் வியூ : கூகுள் நிறுவனம் அறிமுகம்**
    - கூகுள் மேப் செயலில் நீண்ட நாள்களாக எதிர்பார்க்கப்பட்டிருந்த 'ஸ்ட்ரீட் வியூ' (street view) அம்சத்தை கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

- இந்தியாவில் சென்னை, பெங்களூரு, தில்லி, மும்பை, ஹைதராபாத், புணே, நாசிக், வதோதரா, அஹமத்நகர், அமிர்தசரஸ் உள்ளிட்ட நகரங்கள் ஸ்ட்ரீட் வியூ அம்சத்தில் இடம்பெற்றுள்ளன.
- இந்த நகரங்களில் சுமார் 1.5 லட்சம் கிலோ மீட்டர் தூரத்தை 'ஸ்ட்ரீட் வியூ அம்சம் மூலம் புகைப்படங்களாக பார்க்க இயலும்.

❖ **செம்பியன் மகாதேவியின் உலோக சிலை அமெரிக்காவில் கண்டுபிடிப்பு**

- தமிழகத்திலிருந்து கடத்தி செல்லப்பட்ட ஆயிரம் ஆண்டுகள் பழமையான, சோழப் பேரரசி செம்பியன் மகாதேவியின் உலோக சிலை அமெரிக்காவில் உள்ள அருங்காட்சியகத்தில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- சோழப் பேரரசில் வலிமையான அரசியாகத் திகழ்ந்தவர் செம்பியன் மகாதேவி ராஜராஜ சோழனின் மூதாதையராவார்.
- இவரது காலத்தில்தான் செங்கல் கோயில்கள் கருங்கல் கோயில்களாக மாற்றப்பட்டன. கோயில் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட செம்பியன் மகாதேவியின் மறைவுக்குப் பின், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள செம்பியன் மகாதேவி கிராமத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் செம்பியன் மகாதேவிக்கு உலோகத்தால் சிலை அமைக்கப்பட்டது.

❖ **ஆதிச்சநல்லூர் அகழாய்வில் மனித எலும்புகள் கண்டுபிடிப்பு**

- ஆதிச்சநல்லூரில் நடந்து வரும் அகழாய்வு பணியில் 3200 ஆண்டுகள் பழமையான இரு முதுமக்கள் தாழியில் தலை, தாடை, பல், கை, கால், முதுகு எலும்புகள் உள்ளிட்ட மனிதனின் அனைத்து எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இதில் இருந்து எடுக்கப்பட்ட பற்கள் டிஎன்ஏ பகுப்பாய்விற்காக மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- சங்க கால வாழ்விடப் பகுதி மற்றும் சங்க கால நாணயங்களும், 30 செமீ ஆழத்தில் தங்கத்தால் ஆன காதணியும் கிடைத்தது.
- மேலும் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சுண்ணாம்பால் உருவாக்கப்பட்ட தரைத்தளம் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தின் அருகே தற்போது சுண்ணாம்பு மற்றும் செங்கலால் கட்டப்பட்ட சுவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

❖ **ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே 4000ஆண்டுகள் பழமையான இரும்பு உருக்கு உலை**

- விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் அருகே உள்ள வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் 4000 ஆண்டுகள் பழமையான இரும்பு உருக்கு உலையின் தடயத்தை ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

❖ **வெம்பக்கோட்டை அகழாய்வில் இரு கற்கால கருவிகள் கண்டெடுப்பு**

- வெம்பக்கோட்டை வைப்பாற்றின் வடகரையில் உள்ள விஜயகரிசல்குளத்தில் மார்ச் மாதம் முதல் நடக்கும் அகழாய்வு பணியில் பகடைக்காய், முத்து, டெரகோட்டா விளையாட்டு



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

பொருட்கள், தந்தத்தால் ஆன அணிகலன்கள், சுடுமண் குவளை, புகைபிடிப்பான் , அகல் விளக்கு, கற்களால் ஆன சுவர், திமிலுடன் கூடிய காளை உருவங்கள், பெண் சிற்பங்கள் எனப் பல வகையான பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

- 10-வது குழியில் நடக்கும் அகழாய்வில் கல்லால் ஆன கோடாரி கண்டெடுக்கப்பட்டுள்ளது. இரு கோடாரிகளில் ஒன்று பாதி உடைந்த நிலையிலும், மற்றொன்று முழுவதுமாக கிடைத்துள்ளது. இதை மரங்கள் வெட்டவும், வேட்டையாடுவதற்கும் பழங்கால மக்கள் பயன்படுத்தி உள்ளனர். இதன் மூலம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்ச் சமூகம் நாகரிக வளர்ச்சி அடைந்து இருந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

❖ **வெம்பக்கோட்டையில் சுடு மண்ணால் ஆன திமிலுடன் கூடிய காளை உருவம் கண்டெடுப்பு**

- வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் அகழ்வாய்வில் சுடு மண்ணால் ஆன திமிலுடன் கூடிய காளை உருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

❖ **தமிழ்நாட்டில் முதன்முறையாக யூதர்கள் தொடர்புடைய கல்வெட்டு கண்டெடுப்பு**

- தமிழ்நாட்டில் முதன்முறையாக யூதர்களின் சூதபள்ளியைக் குறிக்கும் கி.பி.13-ம் நூற்றாண்டு தமிழ் கல்வெட்டை ராமநாதபுரம் அருகே வாலாந்தரவையில் ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனம் கண்டெடுத்துள்ளது.
- **கல்வெட்டு தகவல்:**
  1. ஸ்வஸ்திஸ்ரீ எனத் தொடங்கும் இக்கல்வெட்டில் சூதபள்ளியான ஐந்நூற்றுவன் பெரும் பள்ளிக்கு தானமாக வழங்கப்பட்ட காணியாவதுக்கு (உரிமை நிலத்தின்) எல்லை சொல்லும் போது, அங்கிருந்த பள்ளிகள், நிலங்கள், தோட்டங்கள் குறிப்பிடப்படுகின்றன.
  2. கிழக்கு எல்லையில் வளைச்சேரி, முடுக்கு வழி சொல்லப்படுகிறது. தெற்கு எல்லையில் திருமுதுச்சோழசிலை செட்டியார், பதிநெண்பூமி செயபாலன், கூத்தன் தேவனார் ஆகியோரின் தோட்டங்களும், மேற்கு எல்லையில் நாலு நாட்டாறி சோணச்சந்தி, ஸ்ரீசோழப்பெருந்தெரு, தரிசப்பள்ளி மதிளி, பிழார் பள்ளி, தரிசாப்பள்ளி தென்மதிள் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன.
  3. நாலு நாட்டாறி என்ற சொல் நானாதேசி என்பதன் தமிழ் வடிவமாக உள்ளது. இங்கு ஐந்நூற்றுவர், பதிநெண்பூமி, நானாதேசி ஆகிய வணிகக்குழுக்களுக்குச் சொந்தமான இடங்கள், தோட்டங்கள் இருந்துள்ளன.
- **சூதப்பள்ளி:**
  1. பெரியபட்டினத்தில் சூதபள்ளி, தரிசப்பள்ளி, பிழார்பள்ளி ஆகிய பள்ளிகள் இருந்ததாக கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. சைவ, வைணவக் கோயில்கள் தவிர்த்த பிற மத வழிபாட்டிடங்கள் பள்ளி என அழைக்கப்பட்டுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

❖ **தூய்மையான கடல், பாதுகாப்பான கடல் பிரச்சார இயக்கம்**

- செப்டம்பர் 17, 2022 அன்று, மத்திய அரசு, தன்னார்வ அமைப்புகள் மற்றும் உள்ளூர் சமுதாயத்துடன் இணைந்து, இந்தியாவின் கடலோரப் பகுதி முழுவதும் "தூய்மையான கடல், பாதுகாப்பான கடல்" என்ற தூய்மை இயக்கத்தை மேற்கொள்ள உள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **அகில இந்திய கல்வி சங்கத்தை வாரணாசியில் பிரதமர் துவங்கி வைத்தார்**
  - ஜூலை 6, 2022 அன்று தேசியக் கல்விக் கொள்கை 2020-ஐ அமல்படுத்துவது தொடர்பான அகில இந்திய கல்வி சங்கத்தை (Akhil Bharatiya Shiksha Samagam on implementation of National Education Policy) வாரணாசியில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.
- **இந்தியாவின் முதலாவது கார்பன் சமநிலை விமான நிலையம் - லடாக்**
  - இந்தியாவின் முதலாவது கார்பன் சமநிலை விமான நிலையமாக (India's first carbon-neutral airport) லடாக் விமான நிலையம் (Leh Airport) அமைக்கப்பட்டு வருகிறது.
- **100% தனியார் நிலஉரிமைதுறைமுகம் - ஜவஹர்லால் நேரு துறைமுகம்**
  - 100% தனியார் நிலஉரிமை கொண்டிருக்கும் நாட்டின் முதலாவது பெரும் துறைமுகமாக (100% Landlord Major Port of India) மும்பையிலுள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகம் (Jawaharlal Nehru Port) மாறியுள்ளது.
  - நாட்டின் முன்னணி கொள்கலன் துறைமுகங்களுள் ஒன்றான ஜவஹர்லால் நேரு துறைமுகம், உலகளவில் தலைசிறந்த முதல் 100 துறைமுகங்களுள் 26-ஆம் இடம் வகிக்கிறது.
- **நாட்டிலேயே முதல் முறை சொந்த இணையதள சேவையை கொண்ட மாநிலம் - கேரளா**
  - நாட்டிலேயே முதல் முறையாக சொந்தமாக தனி இணையதள சேவையை கொண்டுள்ள ஒரே மாநிலமாக கேரள மாநிலம் உருவாகியுள்ளது. அம்மாநில அரசின் கேரளா ஃபைபர் ஆப்டிக் நெட்வொர்க் லிமிடெட் (KFON) நிறுவனத்தின் மூலம் மாநிலத்திலுள்ள அனைவருக்கும் இணையதள இணைப்பு வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
  - "நாட்டிலேயே சொந்தமாக இணையதள சேவையை கொண்ட ஒரே மாநிலமாக கேரளா உருவெடுத்துள்ளது. இதன் சேவையை தொடங்குவதன் மூலம் மக்களுக்கு இணைய அணுகலை அடிப்படை உரிமையாக வழங்க முடியும்" என பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.
- **புதிய நாடாளுமன்றத்தில் வெண்கல தேசியச் சின்னம் பிரதமர் திறப்பு**
  - ஜூலை 11, 2022 அன்று புது தில்லியில், புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் மேற்பரப்பில் வெண்கலத்தால் உருவாக்கப்பட்ட பிரம்மாண்ட தேசிய சின்னத்தை பிரதமர் மோடி திறந்துவைத்தார்.
  - இந்தியாவின் தேசிய சின்னமான நான்முகச் சிங்கம், புதிய நாடாளுமன்றத்தின் மேற்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. 6.5 மீட்டர் உயரம், 9,500 கிலோ எடையில் வெண்கலத்தில் உருவாக்கப்பட்ட தேசிய சின்னத்தை தாங்கி பிடிக்க 6,500 கிலோ எடையில் 4 புறமும் எஃகு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- **நாட்டிலேயே முதலில் 'ஹர் கர் ஜல்' சான்றிதழ் பெற்ற மாவட்டம் புர்ஹான்பூர்**
  - மத்தியப் பிரதேசத்தில் உள்ள 'தர்வாசா ஆஃப் டாக்கின்' என்றும் அழைக்கப்படும் புர்ஹான்பூர், நாட்டிலேயே முதல் 'ஹர் கர் ஜல்' ('Har Ghar Jal') அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் இணைப்பு - Water to Every Household) சான்றிதழ் பெற்ற மாவட்டமாகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இம்மாவட்டத்தில், 254 கிராமங்களில் உள்ள மக்கள் தங்கள் கிராமங்களை 'ஹர் கர் ஜல்' என அறிவித்து, கிராம சபைகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம், கிராமங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் குழாய்கள் மூலம் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்த நாட்டின் ஒரே மாவட்டம் புர்ஹான்பூர் ஆகும்.

❖ **ஆசியா, ஆப்பிரிக்காவில் விளையும் தானியங்களை பிரபலப்படுத்த திட்டம்**

- ஜூலை 17, 2022 அன்று, ஆசியா மற்றும் ஆப்பிரிக்காவில் விளையும் தானியங்களை பிரபலப்படுத்துவதற்கான முன்னெடுப்புகளை நிதி ஆயோக் மற்றும் உலக உணவு திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது

❖ **'200 கோடி' கோவிட்-19' தடுப்பூசிகள் இந்தியா சாதனை படைத்துள்ளது**

- ஜூலை 17, 2022 அன்று, ஒரு வரலாற்று சாதனையாக, இந்தியாவின் ஒட்டுமொத்த கோவிட்19 தடுப்பூசி இயக்கம் இன்று 200 கோடி என்னும் மைல்கல்லைத் தாண்டியுள்ளது. இன்று மதியம் 1 மணி வரையிலான தற்காலிக நிலவரப்படி, நாடு முழுவதும் மொத்தம் 2,00,00,15,631 டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன. 2,63,26,111 அமர்வுகள் மூலம் இது எட்டப்பட்டுள்ளது.
- ஜனவரி 16, அன்று இந்தியாவின் நாடு தழுவிய கோவிட்19 தடுப்பூசி இயக்கம் பிரதமரால் தொடங்கப்பட்டது.
- தொடங்கியதில் இருந்து 100 கோடியை எட்டுவதற்கு கிட்டத்தட்ட 9 மாதங்களும், 200 கோடி தடுப்பூசியை எட்ட இன்னும் 9 மாதங்களும் எடுத்தது, அதிகபட்ச ஒற்றை நாள் தடுப்பூசி சாதனையுடன் இது நிகழ்த்தப்பட்டது.
- செப்டம்பர் 17, 2021 அன்று அதிகபட்சமாக 2.5 கோடி டோஸ் செலுத்தப்பட்டது.
- ஜூலை 15, 2022 அன்று, அரசு கோவிட் தடுப்பூசி மையங்களில் தகுதியுள்ள அனைத்து வயது வந்த மக்களுக்கும் இலவச முன்னெச்சரிக்கை டோஸ் (பூஸ்டர்) வழங்குவதற்காக 75 நாட்கள் நீடிக்கும் 'கோவிட் தடுப்பூசி அமிர்தப் பெருவிழாவை' மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

❖ **இ-அம்ரித் மொபைல் செயலி**

- E-AMRIT மொபைல் செயலி என்பது எலக்ட்ரிக் வாகனங்களுக்கான இணைய போர்ட்டலான e-Amrit என்பதின் புதுப்பிக்கப்பட்ட பதிப்பாகும். இந்த இணையத்தளமானது மின் வாகனங்களை ஏற்றுக்கொள்வது, அவற்றின் கொள்முதல், முதலீட்டு வாய்ப்புகள், கொள்கைகள் மற்றும் மானியங்கள் போன்றவற்றை பற்றிய தகவல்களை வழங்குகிறது.

❖ **இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரியமின்சக்தி நிலையம்**

- தெலங்கானாவின் பெத்தபள்ளி மாவட்டத்தில் ராமகுண்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 மெகாவாட் மிதக்கும் சூரியசக்தி மின்உற்பத்தி நிலையத்தின் கடைசி பகுதியான 20 மெகாவாட் பிரிவின் வணிக ரீதியான உற்பத்தி தொடங்கிவிட்டதாக தேசிய அனல்மின் கழகம் (National Thermal Power Corporation Limited - NTPC) அறிவித்துள்ளது. ராமகுண்டம் மிதக்கும் சூரியசக்தி திட்டம், என்டிபிசியால் தொடங்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரியசக்தி திட்டமாகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **இந்தியாவில் முதல் டிஜிட்டல் லோக் அதாலத் ராஜஸ்தானில் அறிமுகம்**
  - இராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நடைபெற்ற 18வது அகில இந்திய சட்ட சேவைகள் அதிகாரிகளின் கூட்டத்தின் போது, இந்தியாவின் முதலாவது செயற்கை நுண்ணறிவு திறனுடன் செயல்படக்கூடிய டிஜிட்டல் லோக் அதாலத்தை, தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் தலைவர் (NALSA) உதய் உமேஷ் லலித் தொடங்கி வைத்தார்.
- **'செமிகண்டக்டர் கொள்கை' அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் - குஜராத்**
  - 2022-27 செமிகண்டக்டர் கொள்கையை அறிமுகப்படுத்திய முதல் இந்திய மாநிலம் குஜராத். ஐந்து ஆண்டுகளில் குறைந்தபட்சம் 2,00,000 புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில் குஜராத் அரசு பிரத்யேக 'குஜராத் செமிகண்டக்டர் கொள்கை 2022-27' - ஐ அறிவித்துள்ளது.
- **சூரிய மின்சக்தி விநியோகம்; இந்தியா 5-வது இடம்**
  - சூரிய மின்சக்தி விநி யோகத்தில் இந்தியா 5-வது இடத்தைப் பிடித்துள்ளது. கிரிட் இணைக்கப்பட்ட சோலார் ஆலைகளை இயக்குவதற்கான தரநிலைகள் மற்றும் விவரக் குறிப்புகளை வெளியிட்டுள்ளது.
- **தேசிய மின் ஆளுகை சேவை விநியோக மதிப்பீடு**
  - நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்பு துறை, 2021-ஆம் ஆண்டில் நடத்திய தேசிய மின் ஆளுகை சேவை விநியோக மதிப்பீட்டில் மத்திய உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் இணையதளம், மத்திய அமைச்சகங்களின் இணையதளம் என்ற பிரிவில் முதல் இடத்தையும், மத்திய அமைச்சக சேவைகள் தளம் என்ற பிரிவின் கீழ் டிஜிட்டல் காவல் தளம் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளன.
- **இந்தியாவின் முதல் நீருக்கடியில் மெட்ரோ ரயில் சேவை - கல்கத்தா**
  - இந்தியாவிலேயே முதன்முதலாக, கொல்கத்தாவில் நீருக்கடியில் மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. கொல்கத்தா மெட்ரோவின் கிழக்கு-மேற்கு நடைபாதை 16.6 கிலோமீட்டர் நீளமும், ஹூக்ளி ஆற்றின் அடியில் 500 மீட்டர் நீளமும், ஆற்றுப்படுகைக்கு கீழே 33 மீட்டர்களும் இருக்கும்
  - மேலும் இந்த திட்டத்திற்காக ரூபாய் 8,600 கோடி செலவிடப்பட்டு வரும் நிலையில் மத்திய கொல்கத்தா வழியாக ஹவுராவிலிருந்து சால்ட் லேக் வரை இந்த மெட்ரோ பாதை இயக்கப்படும்.
  - 2023-ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டுக்கு வரும் என்று கூறப்படுகிறது.
- **தேசியக் கொடியை இரவிலும் பறக்கவிட மத்திய அரசு அனுமதி**
  - தேசியக் கொடியை இரவிலும் பறக்கவிட அனுமதிக்கும் வகையில், அதுதொடர்பான விதிகளில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டுள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- நாட்டின் 75-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆகஸ்ட் 13 முதல் 15-ஆம் தேதி வரை வீடுகள்தோறும் தேசியக் கொடியை ஏற்றுமாறு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- இந்நிலையில், தேசியக் கொடி தொடர்பான விதிமுறைகளில் மத்திய உள்துறை அமைச்சகம் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

❖ **திரௌபதி முர்மு 15-வது குடியரசுத் தலைவராக பதவியேற்பு**

- ஜூலை 25, 2022 அன்று நாட்டின் 15-வது குடியரசுத் தலைவராக திரவுபதி முர்மு பதவியேற்றார். அவருக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, ஒடிசாவின் சந்தாலி பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். அவர் தனது உரையை 'ஜோஹர்' என்று கூறி தொடங்கினார். சந்தாலி மொழியில் 'ஜோஹர்' என்றால் வணக்கம் என்று அர்த்தம்.

❖ **கார்கில் மலை உச்சிக்கு 'துப்பாக்கி மலை' எனப் பெயர் சூட்டப்பட்டது**

- இந்தியப் படைகளின் வெற்றியை நினைவுகூரும் வகையில் "ஆபரேஷன் விஜய்"யில் பங்கேற்ற வீரர்களின் உச்சபட்ச தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக கார்கில் செக்டாரின் டிராஸில் உள்ள 5140-வது மலைக்கு "துப்பாக்கி மலை" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

❖ **எஸ்சிஓ அமைப்பின் கலாசார, சுற்றுலாத் தலைநகரமாக வாராணசி**

- இந்திய கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் பறைசாற்றும் வாராணசி நகரம், எஸ்சிஓ அமைப்பின் 2022-23-ஆம் ஆண்டுக்கான கலாசார, சுற்றுலாத் தலைநகரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ **யுனெஸ்கோவின் கலை கலாசார பாரம்பரிய குழுவில் இந்தியா**

- ஐ.நா. அமைப்புகளில் ஒன்றான யுனெஸ்கோவின் கலை கலாசார பாரம்பரிய குழுவின் உறுப்பினராக இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- உலக நாடுகளில் உள்ள பழக்கவழக்கங்களையும், கலாசார பாரம்பரியம் திருவிழாக்களையும் மிக்க கலைகளையும், பாதுகாக்கும் நோக்கில் யுனெஸ்கோ சார்பில் 2003-ஆம் ஆண்டு சிறப்புக் குழு அமைக்கப்பட்டது.

❖ **டிஜிட்டல் இந்தியா வாரம் 2022**

- ஜூலை 4 முதல் 9 வரையிலான, டிஜிட்டல் இந்தியா வாரம் 2022 'புதிய இந்தியாவின் தொழில்நுட்பத்தை ஊக்குவிப்பது' ('Catalyzing New India's Techade') என்ற கருப்பொருளுடன் ஜூலை 4 ஆம் தேதி குஜராத்தின் காந்திநகரில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கி வைக்கப்பட்டது.
- இந்நிகழ்வின் போது, டிஜிட்டல் இந்தியா பாஷினி, டிஜிட்டல் இந்தியா ஜெனிசிஸ் மற்றும் இந்தியா ஸ்டேக் குளோபல் ஆகிய திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **அசாம் வெள்ளம்**

➢ அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட (2022) வெள்ளத்தை மோசமான இயற்கை பேரிடர் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

## பொருளாதாரம்

❖ **ரூ.20 லட்சத்துக்கு மேல் டெபாசிட் செய்ய பான் அல்லது ஆதார் அவசியம்**

➢ மத்திய நேரடி வரி வாரியம் (Central Board of Direct Taxes) பிறப்பித்த உத்தரவின் படி ஒரு ஆண்டில் ரூ. 20 லட்சத்துக்கு மேல் வங்கியில் டெபாசிட் செய்தால் ஆதார் மற்றும் பான் அட்டை விவரங்களைத் தெரியப்படுத்த வேண்டும். ஒரு நாளைக்கு ரூ. 50 ஆயிரத்துக்கு மேல் டெபாசிட் செய்தால் பான் அட்டை விவரத்தை தெரிவிக்க வேண்டும் என்ற விதி ஏற்கெனவே உள்ளது.


THULIRR IAS ACADEMY
துண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
SINCE 2017
TNPSC
GROUP I / II / IIA / IV & VAO
ONLINE / OFFLINE CLASSES
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905


❖ **விமான எரிபொருளுக்கு கலால் வரியில் இருந்து விலக்கு**

➢ சர்வதேச விமானங்களுக்கு விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் போது, விமான விசையாழி எரிபொருளுக்கு (ATF) 11% அடிப்படை கலால் வரி செலுத்துவதில் இருந்து உள்நாட்டு நிறுவனங்களுக்கு நிதி அமைச்சகம் விலக்கு அளித்துள்ளது.

❖ **IFSCA தலைமையக கட்டிடத்திற்கு நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்**

➢ ஜூலை 29, 2022 அன்று காந்திநகரில் உள்ள கிப்ட் நகரில் (GIFT City) சர்வதேச நிதிச் சேவை மையங்கள் ஆணையத்தின் (International Financial Services Centres Authority-IFSCA) தலைமையக கட்டிடத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார். இந்தியாவின் முதல் சர்வதேச



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

பொன் பரிமாற்றம் (Bullion Exchange) பரிவர்த்தனை நிலையத்தையும் அவர் தொடங்கி வைத்தார்.

- **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.2 % ஆசிய வளர்ச்சி வங்கி மதிப்பீடு**
  - நடப்பு நிதியாண்டிற்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.2 % ஆக இருக்கும் ஆசிய வளர்ச்சி வங்கி கணித்துள்ளது.
- **இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.4 % சர்வதேச நாணய நிதியம்**
  - 2022-23 நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.4% ஆக இருக்கும் சர்வதேச நாணய நிதியம் (International Monetary Fund) என கணித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- **உலகின் முதல் கலோரா தடுப்பூசி- ஆப்பிரிக்காவில் அறிமுகம்**
  - பொதுமக்களுக்குச் செலுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள உலகின் முதல் கலோரா தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பு மாலாவி, கானா, கென்யா ஆகிய 3 நாடுகளில் அறிமுகப்படுத்தியுள்ளது.
  - கிளாக்ஸோஸ்மித்க்ளைன் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் 'மஸ்கிரிக்ஸ்' என்ற அந்தத் தடுப்பூசி 30 சதவீதம் மட்டும் மலேரியாவைக் கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. மேலும், அந்தத் தடுப்பூசியை 4 தவணைகள் செலுத்திக்கொள்ள வேண்டும்.
- **ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக் கொலை**
  - ஜப்பானில் நாடாளுமன்ற மேல்சபையின் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, பிரசாரத்தின் போது சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.
  - ஷின்சோ அபே ஜப்பான் வரலாற்றில் நீண்ட காலம் பிரதமராக பதவி வகித்தவர் என்ற பெருமையை பெற்றவர்.
- **சர்வதேச அவசரநிலையாக அறிவிக்கப்பட்டது குரங்கு அம்மை நோய்**
  - குரங்கு அம்மை நோயை சர்வதேச அவசரநிலையாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. ஆப்பிரிக்காவில் முதல்முறையாகக் கண்டறியப்பட்ட குரங்கு அம்மை நோய், தற்போது பல்வேறு நாடுகளில் பரவியுள்ளது.
  - 75 நாடுகளில் 16 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு குரங்கு அம்மை பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு டெட்ராஸ் அதானம் தெரிவித்துள்ளார்.
- **குவைத்தின் பிரதமராக அகமது நவாப் அல்-அஹ்மத் அல்-சபா நியமனம்**
  - குவைத் எமிர் அஹ்மத் நவாப், அல்-அஹ்மத் அல்-சபாவை புதிய பிரதமராக நியமித்தார்.
- **பிரபஞ்சத்தின் அரிய புகைப்படம் - நாசாவின் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி வெளிவயிட்டது**



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தைக் காட்டும் வகையில் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி எடுத்த ஒரு புகைப்படத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டுள்ளது. நட்சத்திர திரள்கள் நிறைந்து காணப்படும் இந்தப் புகைப்படம், இதுவரை கிடைத்துள்ள புகைப்படங்களிலேயே பிரபஞ்சம் குறித்து மிகவும் ஆழமானதும் தெளிவானதுமாகும்.
- ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கி விண்வெளியில் பதிவு செய்த புகைப்படத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெளியிட்டார். தற்போது வெளியிடப்பட்டுள்ள ஜேம்ஸ் வெப்பின் முதல் முழு வண்ணப் படமான கேலக்ஸி கிளஸ்டர் SMACS 0723 என்பது அகச்சிவப்புக் கதிர்களின் ஒளியால் இதுவரை காணமுடியாத மங்கலான பொருள்கள் உட்பட ஆயிரக்கணக்கான விண்மீன் திரள்களை காட்சிப்படுத்தியுள்ளது.
- முதன்மையான விண்வெளி அறிவியல் ஆய்வகமாகும். 2021-ம் ஆண்டு டிசம்பர் 25-ம் தேதி தென் அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவில் உள்ள ஐரோப்பாவின் ஸ்பேஸ்போர்ட்டின் ஏரியன் 5 ராக்கெட்டின் மூலம் ஏவப்பட்டது.

**❖ சொந்த விண்வெளி நிலையத்துக்கு ஆய்வகக் கலன் அனுப்பியது சீனா**

- சீனா சொந்தமாக நிறுவி வரும் தியாங்காங் விண்வெளி நிலையத்தில் இணைப்பதற்கான 'வென்டியன்' என்ற பெயரிடப்பட்டுள்ள தனது முதல் ஆய்வகக் கலத்தை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
- பிரம்மாண்டமான லாங் மார்ச்-5பி ஓய்3 ராக்கெட் மூலம் அனுப்பப்பட்டுள்ள 'வென்டியன்' ஆய்வுக் கலம் தியாங்காங் விண்வெளி நிலையத்தின் மையக் கலமான தியான்ஹேவுக்கு இடர்கால மாற்றாகவும் மற்ற நேரங்களில் சக்திவாய்ந்த ஆய்வகமாகவும் செயல்படும்.

## சுற்றுச்சூழல்

**❖ தமிழகத்தின் மூன்று சதுப்பு நிலங்களுக்கு ராம்சர் அங்கீகாரம்**

- இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழ்நாட்டில் மூன்று ஈரநிலங்களுக்கு (சதுப்பு நிலங்கள்) ராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச அங்கீகாரம் அடைந்துள்ளது. சென்னையில் பள்ளிக்கரணை சதுப்பு நிலம், செங்கல்பட்டு மாவட்டத்தில் கரிக்கிலி பறவைகள் சரணாலயம் மற்றும் கடலூர் மாவட்டத்தில் பிச்சாவரம் சதுப்பு நிலம் ஆகியவை இராம்சர் உடன்படிக்கையின் கீழ் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக அதாவது, ராம்சர் தளங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- இந்தியாவில் இதுவரை, 49 இடங்கள் சர்வதேச பட்டியலில் சேர்க்கப்பட்டன. இதில், தமிழகத்தில் நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை பறவைகள் சரணாலயம் இடம் பெற்றுள்ளது. இதையடுத்து, சர்வதேச அளவிலான ராம்சார் பட்டியலில் இடம் பெற்றுள்ள தமிழக பகுதிகளின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- உலக அளவில், சதுப்பு நிலங்களை பாதுகாப்பது தொடர்பான மாநாடு, 1971ல் ஈரான் நாட்டில், ராம்சார் நகரில் நடந்தது. மாநாட்டில் ஏற்பட்ட சர்வதேச ஒப்பந்தம் மற்றும் சூழலியல் பாதுகாப்பு அடிப்படையில், சதுப்பு நிலங்களை பட்டியலிட முடிவானது.
- இயற்கை வளங்களை பாதுகாத்து ஈரநிலங்களின் செழுமையை பேணுதலே ராம்சர் உடன்படிக்கையின் குறிக்கோளாகும். சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்களையும், குறிப்பாக பறவைகளின் புகலிடங்களையும் ராம்சர் அடையாளப்படுத்துகிறது.

❖ **வெஸ்ட் நைல் வைரஸ் காய்ச்சல்**

- வெஸ்ட் நைல் வைரஸ் காய்ச்சல் "க்யூலெக்ஸ்' எனப்படும் ஒரு வகை கொசுக்கள் மூலம் பரவுகிறது. காய்ச்சல், உடல் வலி, தலைவலி, கால் வீக்கம் போன்றவை அதன் முக்கிய அறிகுறிகளாகக் கருதப்படுகின்றன.
- இந்தக் கொசுக்கள் அசுத்தமான நீரில் வளரக் கூடியவை. 1937-இல் ஆப்பிரிக்க நாடுகளில் இந்த வகை பாதிப்பு முதன்முதலில் கண்டறியப்பட்டது. இந்தியாவில் முதன்முறையாக கேரளத்தில் 2011-ம் ஆண்டு இந்த பாதிப்பு கண்டறியப்பட்டது.
- உரிய சிகிச்சை இல்லையெனில் நரம்புசார் பிரச்சனைகள் வரும்.
- சுத்தமான நீரில் வளரும் கொசுக்கள் டெங்கு, சிக்குன் குன்யா உண்டாக்கும்.

❖ **மத்திய பிரதேசத்தில் 27 புலிகள் உயிரிழப்பு**

- 2022-இல் (ஜனவரி 1 முதல் ஜூலை 15, 2022 வரை) புலிகளின் மாநிலம் என்று அறியப்படும் மத்திய பிரதேசத்தில் 27 புலிகள் இறந்துள்ளன.
- இந்தியாவில் நிகழாண்டில் நாட்டில் 74 புலிகள் உயிரிழந்துள்ளன.
- 2018 கணக்கெடுப்பின்படி மத்தியப்பிரதேசத்தில் 526 புலிகள் இருந்தன.
- கன்ஹா, பாந்தவ்கர், பெஞ்ச், சத்புரா, பன்னா, சஞ்சய் துப்ரி ஆகியவை மத்தியப்பிரதேசத்தில் உள்ள புலிகள் காப்பகங்கள் ஆகும்.

❖ **சென்னையில் உலகளாவிய புலிகள் உச்சி மாநாடு**

- மத்திய அரசுடன் இணைந்து தமிழக அரசால் சென்னையில், உலகளாவிய புலிகள் உச்சி மாநாடு அக்டோபர் மாதம் (2022) நடத்தப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் கணக்குப்படி தமிழகத்தில் 264 புலிகள் உள்ளன. இந்தியாவில் உள்ள புலிகள் எண்ணிக்கையில் சுமார் 10 சதவீதம் தமிழகத்தில்தான் உள்ளன.
- ஆண்டுதோறும் ஜூலை 29ல் உலக புலிகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- இந்தியாவில் உள்ள வங்கப் புலிகளின் எண்ணிக்கை 3 ஆயிரத்தை தாண்டி, அதாவது 3,346 ஆக இருக்கலாம் என கூறப்படுகிறது. புலிகள் கணக்கெடுப்பு அடிப்படையில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.
- கடந்த 2018-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி புலிகள் எண்ணிக்கை 2,967 ஆக இருந்தது குறிப்பிடத்தக்கது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## அறிவியல் & தொழில்நுட்பம்

❖ **'ஏஜ4பாரத் நீலேகனி மையம்' - ஐஐடி மெட்ராஸ்**

- இந்திய மொழித் தொழில்நுட்பத்தின் தரத்தை மேம்படுத்தி சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், 'ஏஜ4பாரத் நீலேகனி மைய'த்தை சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி மெட்ராஸ்) தொடங்கியுள்ளது.
- இந்திய மொழிகளுக்கு செயற்கை நுண்ணறிவுடன் கூடிய 'ஓபன் சோர்ஸ்' மொழியைக் கட்டமைக்கும் ஐஐடி மெட்ராஸ்-ன் முன்முயற்சியாகவே ஏஜ4பாரத் தொடங்கப்பட்டுள்ளது.
- இயந்திர மொழிபெயர்ப்பு (Machine Translation), தானியங்கிப் பேச்சு அறிதல் (Speech Recognition) போன்றவற்றுக்கான அதிநவீன மாதிரிகளும் இதில் அடங்கும்.

❖ **பரம் அனந்தா சூப்பர் கம்ப்யூட்டர் (PARAM ANANTA Super Computer)**

- தேசிய சூப்பர் கம்ப்யூட்டிங் மிஷனின் (NSM) கீழ் ஐஐடி காந்திநகரில் உள்ள அதிநவீன சூப்பர் கம்ப்யூட்டர் பரம் அனந்தா நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- பரம் அனந்தா, மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் தொடங்கப்பட்டது.

❖ **புற்றுநோய் கண்டறியும் செயற்கை நுண்ணறிவு கருவி - PIVOT**

- புற்றுநோய் கண்டறிதலுக்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பிவோட் ('PIVOT') என்ற கருவியை சென்னை ஐஐடி ஆய்வுக் குழுவினர் உருவாக்கியுள்ளனர்.
- இது ஒரு தனி நபருக்கு புற்றுநோயை உண்டாக்கும் மரபணுக்களை கணிக்கக்கூடியதாகும். இந்த கருவி புற்றுநோய் சிகிச்சை உத்திகளை திட்டமிட உதவும்.

❖ **அக்னிகுல் காஸ்மோஸ் : விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட்-அப் நிறுவனம்**

- விண்வெளி தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ் சென்னையில் முப்பரிமாண ராக்கெட் என்ஜின்களை (3D printed rocket engines) தயாரிக்கும் இந்தியாவின் முதல் தொழிற்சாலையை திறந்து வைத்துள்ளது.
- இந்த வசதி, 3D அச்சிடப்பட்ட ராக்கெட் என்ஜின்களை உருவாக்குவதற்கு கூடுதல் உற்பத்தித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் மற்றும் அதன் சொந்த உள் ராக்கெட்டுகளுக்கான இயந்திரங்களைத் தயாரிக்கப் பயன்படும்.
- இதன் முக்கியத் தயாரிப்பான அக்னிபான் (Agnibaan) பூமியின் 700 கிமீ நீள்வட்ட பாதையில் 100 கிலோ எடையை கொண்ட செல்லக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அக்னிலெட் (Agnilet) என்பது தனித்தன்மை வாய்ந்தது ஏனெனில், இது ஒற்றை பாகமாக, முப்பரிமாணத்தில் அச்சிடப்பட்டு (1st single-piece 3D printed rocket engine) உருவாக்கப்பட்ட ஒற்றைப் பொருள் வன்பொருளாகும்," இது 2021 இல் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- 2017ல், ஸ்ரீநாத் ரவிசந்திரன் மற்றும் மொயின், எஸ்.பி.எம் ஆகியோரால் துவக்கப்பட்ட அக்னிகுல் காஸ்மோஸ் குறைந்த செலவில் சிறிய செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்துவதற்காக ஏவுவாகனத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது.
- இஸ்ரோவின் நிபுணத்துவம் மற்றும் ராக்கெட்டை உருவாக்கு ஆற்றலை பயன்படுத்திக்கொள்வதற்காக முதலில் ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனமாகவும் இது திகழ்கிறது

❖ **'பேசிலஸ் எஸ்பி பிஎம்06' (Bacillus sp PM06) - சென்னை (ஐஐடி)**

- குறைந்த செலவில், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் வேளாண் கழிவுகளில் இருந்து தொழில்துறை நொதிகள் மற்றும் மதிப்புக் கூட்டுத் தயாரிப்புகளை உற்பத்தி செய்ய 'பேசிலஸ் எஸ்பி பிஎம்06' (Bacillus sp PM06) எனப்படும் பாக்டீரியா எவ்வாறு உதவுகிறது என்பதை ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- கரும்புக் கழிவுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட பாசிலஸ் எஸ்பி பிஎம்06 (Bacillus sp PM06) பாக்டீரியாவை ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர். தொழில்துறை நொதிகள் மற்றும் வேளாண் கழிவுகளில் இருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை உருவாக்க இந்த பாக்டீரியா உதவிகரமாக இருந்தது.
- கோதுமைத் தவிடு அதிகளவு பயன்தரக் கூடியதாகவும், அதற்கு அடுத்த நிலையில் ஜவ்வரிசிக் கழிவு, அரிசித் தவிடு ஆகியவை இருப்பதும் கண்டறியப்பட்டது. மேலும், இந்த செயலாக்க முறை சிக்கனமாகவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையிலும் அமைந்துள்ளது.

❖ **பயணியுடன் வானில் பறக்கும் முதல் ட்ரோன் 'வருணா' அறிமுகம்**

- பயணியுடன் வானில் பறக்கும் முதல் ட்ரோன் 'வருணா' தயாரிக்கப்பட்டுள்ளது. கப்பற்படைக்கான இக்கண்டுபிடிப்பை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- இந்த ட்ரோனில், விமானத்தை இயக்குபவர் போலான பைலட் தேவையில்லை. மற்ற ஆளில்லா விமானம் எனும் ட்ரோன்களைப் போலவே இதையும் இயக்கலாம். சுமார் 25 கி.மீ. பறக்கும் இந்த வருணா, 130 கிலோ எடையுடன் 25 முதல் 33 நிமிடங்கள் வரை பறக்கும் திறன் கொண்டது.
- இந்த புதிய வகை ட்ரோன், சாகர் டிபன்ஸ் இன்ஜினீயரிங் எனும் ஸ்டார்ட் அப் நிறுவனத்தின் கண்டு பிடிப்பாக உள்ளது. கடந்த 2015-ல் இதை நிறுவிய கேப்டன் நிகுன் பராஷர், இந்திய கப்பற்படையில் கேப்டனாகப் பணியாற்றியவர்.

❖ **இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட முதல் லித்தியம் அயன் செல் - (NMC) 2170**

- இந்தியாவின் முதலாவது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 'நிக்கல்-மாங்கனீஸ்-கோபால்ட் (NMC) 2170' எனும் பெயரிலான லித்தியம் அயன் செல்லை (lithium-ion cell), பெங்களூருவைத் தலைமையிடமாகக் கொண்ட மின்சார வாகனங்களை தயாரிக்கும் 'ஓல்டு எலக்ட்ரிக்' 'Old Electric' நிறுவனம் தயாரித்துள்ளது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **திஹான்- இந்தியாவின் தானியங்கி போக்குவரத்து தொழில்நுட்ப வசதி**

➢ இந்தியாவின் முதல் தானியங்கி போக்குவரத்து தொழில்நுட்ப வசதியை 'திஹான்' (Technology Innovation Hub on Autonomous Navigation - TiHAN) ஹைதராபாத் ஐ.ஐ.டி. யில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.

❖ **இந்தியாவின் முதல் கற்பிக்கும் ரோபோ - "ஈகிள்" (Eagle)**

➢ இண்டஸ் இன்டர்நேஷனல் ஸ்கூல் இந்தியாவில் புதுமையான மற்றும் முதல் கற்பிக்கும் ரோபோவான ஈகிள் ரோபோவை அறிமுகப்படுத்தியுள்ளது. மூன்று சிந்து பள்ளிகளில், ஹைதராபாத், பெங்களூர் மற்றும் புனேவில் தலா ஏழு என 21 ஈகிள் ரோபோக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

❖ **லெப்டினன்ட் ஜெனரல் எஸ்.மோகன் தெற்கு சூடானின் ஐ.நா. தளபதியாக நியமனம்**

➢ வெலிங்டன் முப்படை அதிகாரிகள் பயிற்சி கல்லூரி முதல்வரான லெப்டினன்ட் ஜெனரல் எஸ்.மோகன், தெற்கு சூடான் நாட்டுக்கான ஐ.நா. வின் படைத் தளபதியாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் நியமித்துள்ளார்.

❖ **மிஸ் இந்தியா 2022: கர்நாடகாவைச் சேர்ந்த சினி ஷெட்டி**

➢ கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த சினி ஷெட்டி 2022ஆம் ஆண்டுக்கான மிஸ் இந்தியாவாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

❖ **ஜி20 கூட்டமைப்பு தூதராக அமிதாப் காந்த் நியமனம்**

➢ இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட 20 நாடுகள் அங்கம் வகிக்கும் ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமை வகிக்க உள்ளதால், அதற்கான தூதராக (ஷெர்பா) நீதி ஆயோக் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி அமிதாப் காந்த் நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ **'இந்திய இணையத்தின் தந்தை' பி.கே.சிங்கால் காலமானார்**

➢ 'இந்திய இணையத்தின் தந்தை, மற்றும் விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் (VSNL) இன் முன்னாள் தலைவரான பிரிஜேந்திர கே சிங்கால் காலமானார்.

❖ **மாநிலங்களவை நியமன உறுப்பினராக இளையராஜா நியமனம்**

➢ பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்கள், குடியரசுத் தலைவரால் மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர். அந்த வகையில், இசையமைப்பாளர் இளையராஜா, தடகள வீராங்கனை பி.டி.உஷா, திரைக்கதை எழுத்தாளர் வி.விஜயேந்திர பிரசாத், வீரேந்திர ஹெக்டே ஆகியோர் மாநிலங்களவை நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

❖ **உலக வங்கி குழுமத்தின் தலைமை பொருளாதார நிபுணராக இந்தியர்**

➢ உலக வங்கி குழுமத்தின் தலைமைப் பொருளாதார நிபுணராக இந்திய நாட்டவரும், தலைமைப் பொருளாதார நிபுணரான இண்டர்மிட் கில் (Indermit Gill) என்பவரை உலக வங்கி நியமித்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- கௌசிக் பாசுவுக்குப் பிறகு, உலக வங்கியில் தலைமைப் பொருளாதார நிபுணராகப் பணியாற்றும் 2வது இந்தியர் இண்டர்மிட் கில் ஆவார்.

## திட்டம்

- **ரைத்து பந்து திட்டம்**
  - விவசாயிகளை கடன் சுமையிலிருந்து மீட்பதற்கும், சாகுபடிக்கு தேவையான இடுபொருட்களை வாங்குவதற்கும் தெலங்கானா மாநிலத்தில் அரசின் வேளாண்மைத் துறை மூலம் 'ரைத்து பந்து' (RYTHU BANDHU - விவசாயிகளின் உறவினர்) என்ற திட்டம் 2018-19-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- **பிரதமரின் உஜ்வாலா திட்டம் - கூடுதலாக ரூ.200 மானியம் அறிவிப்பு**
  - மே 1, 2016 - ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
  - காஸ் அடுப்பு, சிலிண்டர் இலவசம்.
  - ஒரு சிலிண்டருக்குவைப்புத் தொகை ரூ.1600
  - கச்சா எண்ணெய் விலை உயர்வு (ரஷ்யா – உக்ரைன் போர்)
  - உஜ்வாலா பயனாளிகள் 9.17 கோடி பேருக்கு சிலிண்டருக்கு ரூ.200 மானியம் மத்திய அரசு அறிவித்துள்ளது.
  - தமிழ்நாட்டில் 35 லட்சம் பயனாளிகள் பயனடைவார்கள்.

## மாநாடுகள்

- **குஜராத் மாநிலம் சூரத்தில் இயற்கை விவசாய மாநாடு**
  - குஜராத் மாநிலம் சூரத்தில் நடைபெற்ற இயற்கை விவசாய மாநாட்டில் காணொளி மூலம் உரையாற்றிய பிரதமர் மோடி, இயற்கை விவசாயம் செய்தல் அது இயற்கை சுற்றுச் சுழலுக்கு சேவை செய்வதாக அர்த்தம் என்றும் மண்ணின் தரத்தை பாதுகாக்கிறீர்கள் என்று தெரிவித்தார்.
- **முதலாவது ஐ2யு2 மாநாடு: காணொலி வாயிலாக பிரதமர் மோடி பங்கேற்பு**
  - ஜூலை 14, 2022 அன்று "ஐ2யு2" (I2U2 (India-Israel-UAE-USA) கூட்டமைப்பின் முதலாவது மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது. அதில் பிரதமர் மோடி இஸ்ரேல் பிரதமர் யாகிர் லாபிட், ஐக்கிய அரபு அமீரக அதிபர் முகமது பின் சையத் அல் நயான் மற்றும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
  - ஐ2யு2 கூட்டமைப்பின் முக்கிய அம்சமாக நீர், எரிசக்தி, போக்குவரத்து, விண்வெளி, சுகாதாரம் மற்றும் உணவுபாதுகாப்பு ஆகிய துறைகளில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு கூட்டமைப்பு உறுதி செய்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

## பாதுகாப்பு

❖ **ஒய்- 3023 துணாகிரி, 17-ஏ போர்க்கப்பல்**

- ஜூலை 15, 2022 அன்று கொல்கத்தாவில் உள்ள ஜிஆர்எஸ்இ நிறுவனத்தில் கட்டப்பட்ட ஒய்-3023 துணாகிரி, 17-ஏ போர்க்கப்பலை பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தொடங்கிவைத்தார்.
- இந்த கப்பல், மேம்பட்ட போர்த்திறன், அதிநவீன ஆயுதங்கள் மற்றும் சென்சார் சாதனங்கள் மற்றும் நடைமேடை மேலாண்மை அமைப்புகளை கொண்ட பி17ஏ போர்க்கப்பலின், (ஷிவாலிக் வகை) தொடர்ச்சியாகும்.

❖ **ஐஎன்எஸ் சிந்துத்வாஜ் கடற்படையிலிருந்து விடைபெற்றது**

- ஜூலை 16, 2022 அன்று 35 ஆண்டுகளாக மிகச்சிறந்த முறையில் சேவையாற்றிய ஐஎன்எஸ் சிந்துத்வாஜ் (INS-Sindhudhvaj) இந்திய கடற்படையிலிருந்து விடைபெற்றது.
- தற்சார்பு இந்தியா என்னும் இந்திய கடற்படை முயற்சிகளின் நோக்கை நிறைவேற்றும் வகையில் ரஷ்யாவின் சிந்துகோஷ் வகையைச் சேர்ந்ததாகும்.
- உள்நாட்டு சோனார் USHUS, ருக்மணி என்னும் சுதேசி செயற்கைக்கோள் தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் எம்எஸ்எஸ், இன்டிரியல் நேவிகேஷன் சிஸ்டம் மற்றும் உள்நாட்டு டார்பிடோ ஃபயர் கண்ட்ரோல் சிஸ்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளை இது உள்ளடக்கியதாகும்.

## விருதுகள்

❖ **சர்வதேச எரிசக்தி விருது - கௌசிக் ராஜசேகரா**

- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த கௌசிக் ராஜசேகராவுக்கு சர்வதேச எரிசக்தி விருது கிடைத்துள்ளது.

❖ **'காலச்சுவடு' கண்ணன் (எ) எஸ்.ஆர்.சுந்தரத்திற்கு செவாலியே விருது**

- பதிப்புத்துறையில் இந்தியா - பிரான்சு இடையேயான உறவை மேம்படுத்தப் பங்காற்றியதற்காக, பிரான்சு நாட்டின் செவாலியே விருது பெற பதிப்பாசிரியர் 'காலச்சுவடு' கண்ணன் (எ) எஸ்.ஆர்.சுந்தரம் தேர்வாகியுள்ளார்.
- 'அகவிழி திறந்து', 'எது கருத்துச் சுதந்திரம்?' உள்ளிட்ட சில நூல்களையும் கண்ணன் எழுதியுள்ளார்.
- பிரெஞ்சு அரசு 1957-ம் ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் செவாலியே விருது வழங்கி வருகிறது. இது பிரெஞ்சு அரசால் வழங்கப்படும் மிக உயரிய விருது. செவாலியே என்பதற்கு உயர் 'பெருமைக்குரியவர்' என்று பொருள்.
- தமிழகத்தில் இதற்கு முன்பாக சிவாஜி கணேசன், கமல்ஹாசன், வெ.ஸ்ரீ ராம் (மொழிபெயர்ப்பாளர்), வாணி தாசன் (புலவர்), மதன கல்யாணி (பேராசிரியை) உள்ளிட்டோருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **68-ஆவது தேசிய திரைப்பட விருதுகள்**

➢ மலையாளத்தில் வெளியாகி, பெரும் வரவேற்பைப் பெற்ற 'அய்யப்பனும் கோஷியும்' படம் சிறந்த இயக்குநர், துணை நடிகர், பாடகி, சண்டை இயக்கம் ஆகிய 4 பிரிவுகளில் விருதுகளைப் பெற்றுள்ளது.

➢ இதில் இடம்பெற்ற 'களக்காத்த சந்தனமேரம் வெகுவாக பூத்திருக்கு' பாடலைப் பாடிய பழங்குடியினப் பெண் நஞ்சம்மாவுக்கு சிறந்த பின்னணிப் பாடகிக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

| **68-ஆவது தேசிய திரைப்பட விருதுகள்** | |
|---|---|
| சிறந்த திரைப்படம் | சூரரைப் போற்று |
| சிறந்த திரைக்கதை | சூரரைப் போற்று |
| சிறந்த நடிகர் | சூர்யா (சூரரைபோற்று) |
| சிறந்த நடிகர் | அஜய் தேவ்கன் (தானாஜி: தி அன்சங் வாரியர்} |
| சிறந்த நடிகை | அபர்ணா பாலமுரளி (சூரரைபோற்று) |
| சிறந்த தமிழ் திரைப்படம் | சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும் |
| சிறந்த துணை நடிகை | லட்சுமிப்ரியா சந்திரமௌலி (சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்) |
| சிறந்த இசையமைப்பாளர் | ஜி.வி.பிரகாஷ் (பின்னணி இசை) |

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **முதியோருக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டி**

➢ பின்லாந்தில் நடைபெற்ற முதியோருக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் பக்வனி தேவி தாக்கர் (94 வயது) 100மீ ஓட்டப்பந்தயத்தில் தங்கம் உட்பட 3 பதக்கங்களை பெற்றுள்ளார்.

❖ **48-வது ஜூனியர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டி**

➢ புவனேஸ்வரில் நடைபெற்ற நேஷனர் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்ற நடிகர் மாதவனின் மகன் வேதாந்த் தேசிய சாதனையுடன் தங்கம் வென்றுள்ளார்.

❖ **ஈட்டி எறிதலில் புதிய தேசிய சாதனை படைத்தார் நீரஜ் சோப்ரா**

➢ ஸ்வீடனின் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற டைமண்ட் லீக் தொடரில் ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா 89.94 மீட்டர் தூரம் எறிந்து புதிய தேசிய சாதனை படைத்தார். இதன் மூலம் இந்த போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

❖ **உலக தடகள சாம்பியன்ஷிப் - யூலிமர் ரோஜாஸ் டிரிப்பிள் ஜம்ப்பில் தங்கம்**

➢ அமெரிக்காவின் யூஜின் நகரில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஒலிம்பிக் சாம்பியனான வெனிசுலாவின் யூலிமர் ரோஜாஸ், மகளிருக்கான டிரிப்பிள் ஜம்ப்பில் 15.47 மீட்டர் தூரம் தாண்டி தங்கப் பதக்கம் வென்றார்.

➢ 2017 மற்றும் 2019-ம் ஆண்டுகளிலும் அவர், தங்கம் வென்றிருந்தார். இதன் மூலம் டிரிப்பிள் ஜம்ப்பில் தொடர்ச்சியாக 3-வது முறையாக தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் - இந்தியா முதலிடம்**
  - தென் கொரியாவில் நடைபெற்ற உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியா 15 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்துள்ளது.
- **விம்பிள்டன் டென்னிஸ் வரலாற்றில் முதல்முறை சாம்பியன் - கஜகஸ்தான்**
  - விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரைபகினா சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
  - கஜகஸ்தான் நாட்டில் இருந்து கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெறும் முதல் டென்னிஸ் வீரர் ஆவார்.
- **ஜேக் வைட்மேன் சாம்பியன்**
  - உலக தடகள சாம்பியன்ஷிப்பில் ஆடவருக்கான 1500 மீட்டர் ஓட்டத்தில், நடப்பு ஒலிம்பிக் சாம்பியனை வீழ்த்தி இங்கிலாந்தின் ஜேக் வைட்மேன் சாம்பியன் ஆனார்.
  - 39 ஆண்டுகளில் உலக சாம்பியன்ஷிப்பில் 1500 மீட்டரில் இங்கிலாந்துக்கு கிடைத்திருக்கும் முதல் தங்கம் இதுவாகும்.
- **சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் - பி.வி சிந்து சாம்பியன்**
  - சிங்கப்பூர் ஓபன் பேட்மிண்டன் இறுதிப்போட்டியில் சீன வீராங்கனை வாங் லியியை வீழ்த்தி இந்திய வீராங்கனை பி.வி சிந்து சாம்பியன் பட்டத்தை (முதல்முறையாக) வென்றார்.
  - சாய்னா நேவால் (Saina Nehwal), பி.சாய் பிரனீத் (B. Sai Praneeth) தொடர்ந்து சிந்து சிங்கப்பூர் ஓபன் பட்டம் வென்ற மூன்றாவது நபர் ஆவார்.
- **இந்தியாவில் மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டி - 2025**
  - மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டி இந்தியாவில் 2025-ல் நடைபெறவுள்ளது. இதற்கு முன்பு 2013-ல் ஒருநாள் உலகக் கோப்பைப் போட்டியை இந்தியா நடத்தியது.
  - ஐசிசி மகளிர் போட்டியை இந்தியா 5-வது முறையாக நடத்துகிறது.

## புள்ளிவிவரம்

- **தேசிய அளவிலான கல்லூரிகள் தரவரிசைப் பட்டியல் 2022**
  - சென்னை மாநிலக் கல்லூரி – 3-வது இடம்
  - தில்லி மிராண்டா ஹவுஸ் கல்லூரி – 1-வது இடம்
  - தில்லி ஹிந்து கல்லூரி – 2-வது இடம்
- **சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய தொழில் நிறுவன செயல்பாடுகள் தரவரிசைப் பட்டியல் - 2021**
  - சுற்றுச்சூழலுக்கு உகந்த புதிய தொழில் நிறுவனங்களின் செயல்பாடுகள் 2021 தரவரிசைப் பட்டியல் 3-ம் பதிப்பின் முடிவுகளை, வர்த்தகம் மற்றும் தொழில்துறை, நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொதுவிநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் வெளியிட்டார்.
  - போட்டித்தன்மை மற்றும் கூட்டுறவு கூட்டாட்சி என்ற தொலைநோக்குத் திட்டத்தை ஊக்குவிப்பதே இதன் நோக்கம் ஆகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள் பட்டியலில் குஜராத், கர்நாடகா மற்றும் வடகிழக்கு மாநிலமான மேகாலயா உள்ளன..
- கேரளா, மகாராஷ்டிரா, ஒடிசா, மற்றும் தெலங்கானா மாநிலங்கள், யூனியன் பிரதேசமான ஜம்மு காஷ்மீர் ஆகியன உயர்ந்த செயல்திறன் பட்டியலில் உள்ளன.
- இந்த தரவரிசையில், புதுமையான மற்றும் பரவலான தொழில்நுட்பம் தொடர்பான கொள்கைகளுடன் ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பை முன்னெடுப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.
- தலைமை வகிக்கும் மாநிலங்கள் பிரிவில் தமிழகம் முன்னேற்றம் கண்டுள்ளது.

**❖ நிதி ஆயோக்கின் இந்திய புதுமை கண்டுபிடிப்புகள் பட்டியல்-2021**

- நிதி ஆயோக்கின் இந்திய புதுமை கண்டுபிடிப்புகள் 2021 பட்டியலில் கர்நாடகா (18.01), மணிப்பூர் (17.66), சண்டிகர் (16.35), மகாராஷ்டிரா (16.06) ஆகியவை பெரிய மாநிலங்கள் பிரிவில் முறையே முதல் நான்கு இடங்களில் உள்ளன.
- வடகிழக்கு மற்றும் மலைப்பிரதேச மாநிலங்கள் பிரிவில் மணிப்பூரும், யூனியன் பிரதேசங்கள் பிரிவில் சண்டிகரும் முதலிடம் வகிக்கின்றன.
- மாநிலங்கள் பிரிவில் தமிழ்நாடு 15.69 புள்ளிகளுடன் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

**❖ ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு (Henley Passport Index) - 2022**

- ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு, 2022 ஆம் ஆண்டில் உலகின் சக்திவாய்ந்த 199 பாஸ்போர்ட்டுகளில் இந்தியா 87வது இடத்தில் உள்ளது.
- ஜப்பான் முதல் இடத்தைப் பிடித்தது. பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் முன் விசா இல்லாமல் அணுகக்கூடிய இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டது.

**❖ பாலின இடைவெளி குறியீடு (Gender Gap Index) - 2022 : இந்தியா 135-வது இடம்**

- பொருளாதார பங்கேற்பு, கல்வி பெறுதல், சுகாதாரம் மற்றும் அரசியல் அதிகாரம் ஆகியவற்றில் ஆண்-பெண் பாலின இடைவெளி குறியீடு பட்டியலை உலக பொருளாதார அமைப்பு ஆய்வு செய்து 15 ஆண்டுகளாக அறிக்கை வெளியிட்டு வருகிறது.
- பாலின சமத்துவமின்மை பட்டியலில் 146 நாடுகள் பட்டியலில் இந்தியா 135-வது இடத்தில் உள்ளது. அண்டை நாடுகளான வங்கதேசம் 71-வது இடத்திலும், நேபாளம் 96-வது இடத்திலும், இலங்கை 110-வது இடத்திலும், பாகிஸ்தான் 145-வது இடத்திலும் உள்ளன.
- 2021-ம் ஆண்டு 156 நாடுகள் கொண்ட பட்டியலில் 140 - ம் இடத்தில இருந்தது.
- கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் 5 இடங்கள் முன்னேறி இருந்தாலும், கடந்த 16 ஆண்டுகளாக பாலியல் சமத்துவமின்மையில் இந்தியா மோசமான நிலையிலேயே இருப்பதாக உலகப் பொருளாதாரக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
- பாலின சமத்துவமின்மை விகிதம் 5 சதவீதத்துக்கும் அதிகமாக உள்ள 5 நாடுகளில் இந்தியா, கத்தார், பாகிஸ்தான், அஜர்பைஜான், சீனா ஆகியவை இடம் பெற்றுள்ளன.

- இந்த பட்டியலில் ஐஸ்லாந்து, பின்லாந்து, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகள் முறையே முதல் 4 இடங்களை பிடித்துள்ளன.
- கடைசி இடத்தில் ஆப்கானிஸ்தான் (146-வது) உள்ளது.
- பாலின சமத்துவமின்மை தெற்காசியாவில் அதிகப்படியாக 62.3% -ஆக உள்ளது.

| துணை குறியீடுகள் | இடம் | மொத்த நாடுகள் |
|---|---|---|
| உடல்நலம் மற்றும் உயிர்வாழ்வு (சுகாதாரம் மற்றும் வாழ்வியல்) - Health & Survival | 146-வது | 146 |
| பொருளாதார பங்கேற்பு மற்றும் வாய்ப்பு (பொருளாதார பங்களிப்பு மற்றும் வாய்ப்புகள்) Economic Participation & opportunity | 143-வது | 146 |
| கல்வி சாதனை (கல்வி முன்னேற்றம்) Education Attainment | 107-வது | 146 |
| அரசியல் அதிகாரம் (அரசியல் அதிகாரம்) Political Empowerment | 48-வது | 146 |

## முக்கிய தினம்

1. ஜுலை 1 - தேசிய பட்டய கணக்காளர்கள் தினம்
2. ஜுலை 1 - தேசிய மருத்துவர்கள் தினம்
3. ஜுலை 3 - சர்வதேச பிளாஸ்டிக் பை ஒழிப்பு தினம்
4. ஜூலை 7 - இரட்டைமலை சீனிவாசன் பிறந்த தினம்
5. ஜுலை 10 - தேசிய மீன்வளர்ப்பு விவசாயிகள் தினம்
6. ஜுலை 11 - உலக மக்கள்தொகை தினம்
7. ஜுலை 12 - உலக மலாலா தினம்
8. ஜுலை 15 - கல்வி வளர்ச்சி தினம் (காமராஜர் பிறந்த தினம்)
9. ஜுலை 15 - உலக இளைஞர் திறன் தினம்
10. ஜூலை 17 - சர்வதேச நீதி தினம்
11. ஜூலை 18 - தமிழ்நாடு நாள்
12. ஜூலை 18 - நெல்சன் மண்டேலா தினம்
13. ஜூலை 20 - சர்வதேச நிலவு தினம்
14. ஜூலை 20 - சர்வதேச சதுரங்க விளையாட்டு தினம்
15. ஜுலை 23 - தேசிய ஒளிபரப்பு தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

16. ஜுலை 26 - சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பு பாதுகாப்புக்கான சர்வதேச தினம்
17. ஜுலை 26 - கார்கில் விஜய் திவாஸ் தினம்
18. ஜூலை 28 - உலகக் கல்லீரல் அழற்சி தினம்
19. ஜூலை 28 - உலக இயற்கை பாதுகாப்பு தினம்
20. ஜூலை 29 சர்வதேச புலி தினம்



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com